Printed Matter

MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only

## மலங்கரை கத்தோலிக்க பொதுநிலையினர் தினம்

மே 1




To

BOOK POST

If Undelivered please return to ...

Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165

Santhom Press
Diocese of Marthandam
Mob : +91 94-42-469852

# Bulletin

Diocese of Marthandam

மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



மே 26

## ஆண்டவரின் விண்ணேற்றம்

மலர் 19 மே 2022 இதழ் 5

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.05.2022 | Sunday | 7.30 am<br>2.00 pm | Holy Mass<br>Holy Mass | Chellamkonam<br>Kirathoor |
| 02.05.2022 | Monday | 10.00 am<br>3.30 pm | College Day<br>CBSE New Campus Inauguration & Annual Day | Elavuvilai<br>Vencode |
| 03.05.2022 | Tuesday | 6.30 am<br>10.00 am | Vestition<br>Vocation Promotion Camp | Bishop's House<br>Pastoral Centre |
| 04-25.05.2022 | | | | Italy |
| 26.05.2022 | Thursday | 6.00 pm | Holy Mass | Chitharal |
| 27.05.2022 | Friday | 6.30 am<br>10.00 am | Minor Orders<br>College Day | Minor Seminary - Elavuvilai<br>Mariagiri |
| 28.05.2022 | Saturday | 6.30 am<br>5.00 pm | First Profession<br>Orientation Class For Major Seminarians | DM Convent Marthandam<br>Catholicate Centre |
| 29.05.2022 | Sunday | 6.00 am<br>4.00pm | Holy Mass<br>Holy Mass | Nadaikkavu<br>Pinkulam |
| 30.05.2022 | Monday | 6.30 am | Diaconate | Minor Seminary - Elavuvilai |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

## MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 19 மே 2022 இதழ். 5

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

# BULLETIN OF THE DIOCESE OF MARTHANDAM

*PATRON*

*His Excellency Most Rev. Vincent Mar Paulos*

*EDITOR*

*Very Rev. Fr. Jose Bright*

*The Chancellor*

*COVER DESIGN*

*Mrs. Uni*

*PRINTING*

*Santhom Press,*

*Marthandam*

*PUBLISHED BY*

*The Chancellor*

*Diocese of Marthandam*



## THE SYRO-MALANKARA CATHOLIC CHURCH

MORAN MOR BASELIOS CARDINAL CLEEMIS
MajorArchbishop-Catholicos

Major Archiepiscopal Curia
Catholicate Centre
Pattom, Trivandrum -695 004

Prot No CCL 1/2022

20.01.2022

## Circular

### காதோலிக்கா தினம் - 2022

மேதகு ஆயர்களே, வணக்கத்திற்குரிய கோர் ஏப்பிஸ்கோப்பாமார்களே, றம்பான்மார்களே, மதிப்பிற்குரிய குருக்களே, திருத்தொண்டர்களே, இருபால் துறவிகளே, ஆண்டவரில் அன்பிற்குரிய விசுவாசிகளே!

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவை ஆயர் பேராய திருஅவையாக உயர்த்தப்பட்டதன் 17 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இதனை முன்னிட்டு 2022-ம் ஆண்டு பிப்ரவரி 6-ம் நாள் ஞாயிற்றுகிழமை காதோலிக்கா தினமாக கொண்டாடப்படுகிறது. நமது திருஅவையை வியத்தகு முறையில் வழிநடத்தி பராமரித்து அருள் பொழியும் அண்டவருக்கு நன்றி கூறுவோம். நமது திருஅவையின் திருப்பணிகள் அனைத்தும் ஆசீர்வாதமாக அமைய இறைவேண்டல் செய்வோம். பெரும் தொற்று நோயினாலும் பல்வேறு நெருக்கடிகளினாலும் வருந்தி இருக்கும் இத்தருணத்தில் உறுதியான மனதிடனுடனும் இறை நம்பிக்கையுடனும் திருஅவையின் திருப்பணிகளை திறம்பட செய்ய இறைவேண்டலுடன் உறுதி எடுப்போம். இக்கட்டான இச்சூழல்களில் இறைவனாகிய ஆண்டவர் நம்மை கரம்பிடித்து வழிநடத்தட்டும். காதோலிக்கா தினத்தின் ஆசீர்வாதங்களை திருஅவை மக்களாகிய நாம் அனைவரும் பகிர்ந்து கொள்வோம்.

மறுவொன்றிப்பு என்னும் மாபெரும் நிகழ்வு நடந்து 75 ஆண்டுகள் கடந்த போது மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவை அகில உலக திருஅவையில் சுயஆட்சி அதிகாரமுள்ள ஆயர் பேராய திருஅவையாக உயர்த்தப்பட்டது. இறையூழியர் மார் இவானியோஸ் ஆண்டகை 1930-ல் மறுவொன்றிப்பு அடைந்த போது இக்கருத்தை மனதில் வைத்து இறைவேண்டல் செய்தார். இன்று 12 மறைமாவட்டங்கள் வாயிலாகவும் மறைத்தூதுப்பணி மண்டலங்கள் வாயிலாகவும் அகில உலக கத்தோலிக்க திருஅவையில் நற்செய்தி அறிவிப்பு பணிக்கு மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவை புது எழுச்சியை வழங்கி வருகிறது என்பதை

நன்றியுடன் நினைவு கூர்வோம். திருஅவையின் வளர்ச்சிக்காக கடினமாக உழைக்கும் ஆயர்கள், குருக்கள், இருபால் துறவிகள், பொதுநிலையினர் ஆகியோரை நன்றியுடன் நினைவு கூர்கின்றேன். மறுவொன்றிப்பின் நூற்றாண்டு விழாவை முன்கண்டு திருஅவையின் திருப்பணிகளை வலுப்படுத்த முயற்சிப்போம்.

மார்த்தாண்டம் மறைமாவட்டம் நமது திருஅவையின் மறைத்தூதுப் பணியின் முகமாக விளங்குகிறது. இம்மறைமாவட்டம் தனது வெள்ளிவிழாவின் நிறைவை கண்டுள்ளது. 2021-ம் ஆண்டு டிசம்பர் 16-ம் நாள் நமது ஆயர் பெருமக்கள் இணைந்து கட்டியெழுப்பப்பட்டு கொண்டிருக்கும் தலைமை கோயிலின் கீழ் நிலையில் நன்றியின் திருப்பலி ஒப்புக்கொடுத்தோம். மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் ஆயர் திருப்பணியில் குருக்களும் துறவிகளும் பொதுநிலையினரும் ஒன்றிணைந்து காட்டும் அர்ப்பண மனநிலையை இதய பூர்வம் பாராட்டுகிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக மாறுபட்ட அனுபவங்களில் கடந்து சென்றுக் கொண்டிருக்கின்றோம். கோவிட்-19, அதன் உருமாற்றங்கள் இவற்றின் தாக்கம் இன்னும் நம்மை விட்டு அகன்றபாடில்லை. சமூகத்தின் எல்லா துறைகளிலும் பல்வேறு சவால்களை இது உருவாக்கியிருக்கிறது. இக்காலகட்டத்தில் திருஅவை திருப்பணிகளை மிகுந்த கவனத்துடன் செய்ய வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. நமது சிறுவர்கள் மீதும் இளையோர்கள் மீதும் அதிக கவனமும் அக்கரையும் காட்ட வேண்டிய நேரம் இது. இவர்களுக்காக நடத்தும் பணிவிடைகளில் அதிக அக்கரை காட்டுவோம். நமது குடும்பங்களை இறைஅருளின் உறைவிடங்களாக உருவாக்குவோம்.

நமது திருஅவையின் 2-வது பேரவையில் திருஅவை மற்றும் சமூகத்தின் அடிப்படை அலகாகிய குடும்பங்களை ஆற்றல்படுத்த திருஅவை எடுத்துக் கொள்ள வேண்டிய முயற்சிகளை குறித்து ஆய்வுச் செய்தோம். அருள் நிறைந்த குடும்பங்களாக வாழ வழிகாட்டும் சிந்தனைகளை பகிர்ந்து கொண்டோம். பேரவையின் சிந்தனையின் விளைவாகவும், தொடர் செயல்பாட்டின் அடையாளமாகவும் திருமணமாகி 10 ஆண்டுகள் வரையுள்ள தம்பதிகளுக்கு திருஅவை புதிய ஒரு திருப்பணிக்கு தொடக்கமிட்டுள்ளது. மேதகு ஆயர் தோமஸ் மார் எவுசேபியோஸ் அவர்களின் தலைமையில் இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இதைபற்றிய முழு விவரங்களும் உங்களுக்கு விரைவில் தெரிவிக்கப்படும். மலங்கரை சுறியானி கத்தோலிக்க



திருஅவையின் பல்வேறு பொதுப்பணிகளையும் ஆயர் மாமன்ற பணிக்குழுக்களின் செயல்பாடுகளையும், திருஅவையின் தலைமை செயலகம் (Catholicate Centre) ஒருங்கிணைத்து வருகிறது. திருஅவை மக்களின் மிகுந்த ஒத்துழைப்புடன் இம்மையம் செயல்படுகிறது. காதோலிக்கா தின காணிக்கையை செயலகத்தின் செயல்பாடுகளுக்காக மாற்றி வைப்பது நமது வழக்கம். தலைமை செயலகத்தின் சிறப்பு பணிகளுக்கும் திருஅவையின் பொதுவான திருப்பணிகளுக்குமாக நீங்கள் நன்கொடைகள் வழங்கி உதவ வேண்டுமென்று திருஅவையின் மக்கள் அனைவரையும் கேட்டு கொள்கின்றேன்.

பங்குதந்தையர்கள் இக்கருத்தை முன்னதாகவே இறைமக்களுக்கு தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். பங்குகள் மட்டுமல்ல நிறுவனங்களும், துறவற சமூகங்களும் அவற்றின் மாகாணங்களும் இம்முயற்சியில் தாராள மனதுடன் பங்கேற்க வேண்டும். மறைமாவட்ட ஆயர்கள் அவரவர் மறைமாவட்டங்களில் கிடைக்கும் காணிக்கை மற்றும் நன்கொடைகளை ஆயர் மாமன்றத்தின் முடிவுக்கு ஏற்ப தங்களது விகிதத்தை அடுத்து வரும் ஆயர் மாமன்றத்தின் கூட்டத்தில் சமர்பிக்க வேண்டும். துறவற சமூகங்களின் தலைவர்களும், மாகாண தலைவர்களும் தங்கள் சமூகத்தின் நன்கொடையை காதோலிகேட் மைய நிதிகாப்பாளரிடம் ஆயர் மாமன்ற கூடுகைக்கு முன் ஒப்படைக்க வேண்டும். கடந்த ஆண்டுகளில் இம்முயற்சியில் பங்கேற்ற அனைவருக்கும் பாராட்டுகளும் நன்றியும் தெரிவித்து கொள்கிறேன். காதோலிக்கா தினத்தில் திருப்பலிக்கு பின் நமது பங்குகளிலும், நிறுவனங்களிலும் மறைத்தூதுப்பணி மையங்களிலும் காதோலிக்கா கொடி உயர்த்தி உறுதி மொழியும் எடுத்துக்கொள்ள வேண்டும். உலகின் பல்வேறு பகுதிகளில் திருஅவையின் திருப்பணிகளில் ஈடுபட்டிருக்கும் மேதகு ஆயர்களையும், மதிப்பிற்குரிய குருக்களையும், இருபால் துறவிகளையும், இறைமக்கள் சமூகத்திற்கும் பாராட்டு கலந்த நன்றி தெரிவித்து இறைவேண்டல் செய்கிறேன். இறைவனின் இரக்கமும் ஆசீரும் உங்கள் அனைவர் மேலும் என்றென்றும் நிறைவாக தங்குவதாக.

*இவண்,*
ஆண்டவரில் உங்கள் எளிய பணியாள்

+Baselios Cleemis

**+ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
உயர் பேராயர் மலங்கரை கத்தோலிக்கத்
திருச்சபையின் காதோலிக்கோஸ்

06-09-2021

**Most Rev.Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist 629 165

4.04.2022

***"செழிப்பான நாட்டுக்கு அதன் கனிகளையும், நலன்களையும் நுகருமாறு நான் உங்களை அழைத்து வந்தேன். ஆனால் நீங்களோ, அந்நாட்டிற்குள் வந்து அதனை தீட்டுப்படுத்தினீர்கள். எனது உரிமைச் சொத்தை நீங்கள் அருவருப்புக்குள்ளாக்கினீர்கள். (எரேமியா 2:7)" கிறிஸ்துவில் அன்புநிறை அருட்தந்தையர்களே, அருட்சகோதரர்களே, அருட்கன்னியர்களே, இறைமக்களே,***

தவக்காலம் என்பது ஆரோக்கிய வாழ்விற்கான செயலாக்கத்தினை துவங்குவதற்கான ஒரு அழைப்பாகும். பூமி ஆரோக்கியமாக இருந்தால் மட்டுமே பல்லுயிர் பெருக்கம் செழித்து மனிதகுலம் அதன் வாழ்வாதாரம் மற்றும் உயிர் வாழ்வதற்கான ஆதாரங்களை பெற முடியும்.

இந்திய ஆயர் பேரவையின் வழிகாட்டுதலில் இயங்கும் சமூகப்பணி நிறுவனமான காரிதாஸ் இந்தியா ஒவ்வொரு ஆண்டும் தவக்கால சிறப்பு கருத்தை மையமாக வைத்து உலக மக்களுக்கு பல்வேறு ஆக்கபூர்வமான செயல்களை செய்து வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு "வளமான பூவுலகு நலமான வாழ்வு" என்னும் பொருளில் ஒவ்வொரு உயிரினமும் ஆரோக்கியமான வாழ்வை பெறுவதற்கும், வளமான பூவுலகை நிறுவ நிதானித்து சிந்திக்கவும், செயல்படவும் நமக்கு அழைப்பு விடுத்துள்ளது. மாசுபாடு, காலநிலை மாற்றம், குறைந்து வரும் பல்லுயிர் பெருக்கம் மற்றும் சுத்தமான குடிநீர் பற்றாக்குறை போன்றவற்றால் ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கு ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சியை திருத்தந்தை பிரான்சிஸ்,



"புகழ் அனைத்தும் உமதே (Laudato Si)" என்ற திருத்தூதுவ சுற்றுமடலில் எடுத்துரைத்துள்ளார். மனித குலத்தின் பேராசையை கட்டுபடுத்தி சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் வரவிருக்கும் அழிவை தடுக்க இயலாது. கடவுள் இவ்வுலகை, மனிதர்களிடம் பொறுப்புடன் வாழவும், தலைமுறை தலைமுறையாக மக்கள் வாழ ஏற்ற வகையிலும் முழு படைப்பிற்கும் உகந்த சூழலாக வைத்திருக்கவும் ஒப்படைத்துள்ளார். ஆனால் மனிதனோ அதற்கு நேர்மாறாக செயல்பட்டு இப்பூமியை

அழிவின் விளிம்பிற்கு கொண்டு சென்றுள்ளான். கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் மனித செயல்பாடுகள் முடங்கிய நேரத்தில் இயற்கை தன்னை எவ்வாறு சரி செய்து கொண்டது என்பதையும், நோய் எதிர்ப்பு தன்மை கொண்ட பாதுகாப்பான உணவு தேவை என்பதையும் நமக்கு கற்பித்துள்ளது.

எனவே இந்த தவக்கால பிரச்சாரம் வழியாக மனிதனுக்கும், சுற்றுச்சூழலுக்கும் இடையேயுள்ள தொடர்பை புதுப்பிக்கவும், ஒவ்வொரு உயிரினமும் ஆரோக்கியமான வாழ்வை பெறுவதற்கும், இப்பூவுலகு தன்னை புதுப்பித்துக் கொள்ள உதவியாக தனிப்பட்ட மற்றும் பங்களவுகளில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அனைவருக்கும் நல வாழ்வு என்ற கனவை நனவாக்க வளமான சுற்றுச்சூழல் அமைப்பு எல்லா இடங்களிலும் உருவாக்கப்பட வேண்டும்.

தவக்கால பிரச்சாரமாக காரிதாஸ் இந்தியா முன்வைத்துள்ள உறுதிமொழி அடங்கிய நோட்டீசை தங்கள் பங்குகளில் வாசித்து அதற்கேற்ப ஊக்கத்தோடும், உறுதியோடும், முழு மனத்தோடும் தனிநபர் மற்றும் பங்களவில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்க மக்களை உறுதியோடு செய்யுமாறு அன்பாய் கேட்டுக் கொள்கிறேன்.

காரிதாஸ் இந்தியா வழியாக சமூக நல பணிகளுக்காக நிதி உதவிகளை பெற்று வருகிறோம். தவக்கால சேமிப்பு/ஓசான்னா ஞாயிறு

காணிக்கை பங்களிப்பை காரிதாஸ் நிறுவனத்திற்கு அனுப்பி வைத்து இணைந்து செயல்பட வேண்டியது நமது கடமையாகும். ஆகவே ஓசான்னா ஞாயிறு அன்று வசூலிக்கும் காணிக்கையை சமூக நல திட்டங்களுக்காக மறைமாவட்ட நிதி காப்பாளரிடம் ஒப்படைக்க கேட்டுக் கொள்கிறேன். மிட்ஸ் சமூக பணி மையம் முன்னெடுக்கும் சமூக நல திட்டங்களை பங்குகளில் செயல்படுத்தி ஏழைகளை வாழ்வடைய செய்வோம். உதவும் கரங்களை ஊக்குவிப்போம். தமிழ்நாடு தொழிலாளர் பணிக்குழு சார்பாக நம் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கு அரசு நலத்திட்டங்களை பெற வழிகாட்டுதல்களும், பல பயிற்சி திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறோம். மிட்ஸ் சமூகப் பணி மையம் மூலமாக "கன்னியாகுமரி மாவட்ட மிட்ஸ் அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா அனைத்து தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கம்" என்ற அமைப்பு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்டு தொழிலாளர்களுக்கு தேவையான அரசு திட்டங்களை பெற உதவி செய்து வருகிறோம். மேலும் ஒவ்வொரு பங்கிலும் கிறிஸ்தவர் தொழிலாளர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு மிட்ஸ் நிறுவனத்துடன் இணைந்து செயல்பட கேட்டுக்கொள்கிறேன். இதற்காக நமது தொழிலாளர் நலப்பணிக்குழுவின் செயலர் திரு. பால்ராஜ் அவர்கள் உங்களை தொடர்பு கொள்வார்கள். தொழிலாளர்கள் வாழ்வு சிறக்கவும், உரிமைகள் பாதுகாக்கவும் சிறப்பு கவனம் செலுத்துவோம். இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

***இவண்,***

† **மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர்



**Most Rev.Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist 629 165

06.04.2022

***கிறிஸ்துவில் அன்புநிறை அருட்தந்தையர்களே, அருட்சகோதரர்களே, அருட்கன்னியர்களே, இறைமக்களே,***

உயிர்த்த இயேசுவில் நம்பிக்கைக் கொண்டு இறைமக்கள் சமூகமாய், திருஅவையாக வாழ்ந்து வளர்ந்து கொண்டிருக்கின்ற நாம், அன்றாட வாழ்வில் சந்திக்கும் அனுபவங்களை ஆண்டவரிடம் அர்ப்பணித்து ஆலமரமாய் எழுந்து நிற்க மலங்கரை கத்தோலிக்க திருஅவை நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

அரசியல் பொருளாதார சமூக மாற்றங்களினால் நமது வாழ்வில் சந்திக்கும் சவால்களை எதிர்கொள்ள ஆன்மீக ஆற்றல் கட்டாயம் நமக்கு தேவை. இத்தருணத்தில் மலங்கரை கத்தோலிக்க திருஅவையின் தந்தையும் தலைவருமான மோறான் மோர் பசேலியோஸ் கிளிமீஸ் காதோலிக்கா பாவா அவர்கள் நமது தனி திருஅவைக்கு ஒரு சில வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கியுள்ளார். அவ்வழிகாட்டுதல்படி ஒவ்வொரு மறைமாவட்டங்களும் நற்கருணை ஆராதனை, இரக்கத்தின் செபமாலை என ஆன்மீக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நமது மறைமாவட்டம் ஜூலை மாதம் இப்பக்தி முயற்சிகளை சிறப்பாக மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார். காதோலிக்கா பாவாவின் சுற்றுமடலின் தமிழாக்கம் கிடைத்திருக்கும் என நம்புகிறேன்.

நமது மறைமாவட்டத்தில் 2022 ஏப்ரல் முதல் 2023 மார்ச் வரையுள்ள ஓராண்டு, "ஆன்மீகத்தை ஆற்றல்படுத்தி வாழ்வை வளப்படுத்துவோம்" என்ற மையசிந்தனையில் சிறப்பு ஆன்மீக பயிற்சிகள், செபங்கள் (நற்கருணை ஆராதனை, இரக்கத்தின் செபமாலை) ஏற்படுத்தவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்முயற்சி வழியாக நற்கருணை பக்தியையும், செபமாலை பக்தியையும் வளர்த்து ஆன்மீகத்தை வலுபடுத்த மறைமாவட்டம் வழங்கும் வழிகாட்டுதலை அனைவரும் கடைபிடித்து வாழ்வை வளம்படுத்த முயற்சிப்போம்.

மறைவட்டங்களில் அமையப் பெற்றுள்ள நற்கருணை சிற்றாலயங்களில் ஒவ்வொரு மாதமும் மறைவட்டங்கள் சார்பாக நற்கருணை ஆராதனை நடத்தவும், இறையன்னையின் இரக்கத்தின் செபமாலை செபிக்கவும் மறைவட்ட முதன்மை குரு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

பங்குகளில் மாதந்தோறும் இக்கருத்தை வலியுறுத்தி நற்கருணை ஆராதனையும், இரக்கத்தின் செபமாலையும் செபிக்க பங்குத்தந்தையர்கள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

குடும்பங்களே ஆன்மீக வலுபடுத்துதலின் அடிப்படை சக்தி என்பதை கருத்தில் கொண்டு திருமணமாகி 10 ஆண்டுகள் நிறைவுற்ற தம்பதியர்களை மறைவட்டம் மற்றும் பங்கு அளவில் ஒன்றுகூட்டி ஆன்மீக வலுபடுத்துதல் பயிற்சிகள் வழங்க வேண்டும்.

மறைமாவட்ட அளவில் ஜூலை மாதம் நாம் இணைந்து இம்முயற்சிகளை மேற்கொள்வோம்.

ஆகவே ஒவ்வொரு முதன்மை குருக்களும் தங்களின் மறைவட்டத்தில் ஏற்படுத்துகின்ற பக்தி முயற்சிகள், பயிற்சிகள் பற்றிய நிகழ்வுகளை அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மறைவட்ட மேய்ப்புபணி அறிவுரைக்குழு கூட்டத்தில் ஆலோசனைகள் மேற்கொண்டு திட்டவடிவம் தயாரித்து மேய் 8-ம் நாளுக்கு முன் மறைமாவட்டத்தில் ஒப்படைக்கவும்.

தயாரிக்கின்ற திட்டவடிவின்படி மறைவட்டத்தில் இம்முயற்சிகளை வெற்றிபெறச் செய்ய அனைவரும் இணைந்து செயல்பட அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

***இவண்,***



**† பேரருட் பெருந்தகை வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர்



# மறைபரப்பு பணித்தள செய்திகள்

**புலம்பெயர்ந்தோர் பணிக்குழு**

## வாழ்த்துகிறோம்



மார்த்தாண்டம் மறைமாவட்ட மலங்கரை கத்தோலிக்க திருஅவையின் இறைமக்களுள் சிலர் திருமணம், வேலை மற்றும் கல்வி காரணமாகவும் வேறு காரணத்தினாலும் வெளிமாவட்டங்கள், வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் வசித்து வருகின்றனர். அவர்களை ஒருங்கிணைத்து மறைமாவட்டத்தில் நடக்கும் முக்கிய நிகழ்வுகளை அவர்களுக்கு அறிவிக்கவும் தொலைத்தொடர்பு கருவிகளான Zoom meet அல்லது Zoom meet வழியாக நமது ஆயர் இம்மக்களை சந்தித்து ஆன்மீக உரையாடல் நடத்தவும் மற்றும் தமிழ்நாட்டின் மற்ற மாவட்டங்களில் மறைபரப்பு தளங்களை உருவாக்கும் நோக்குடன் புலம்பெயர்ந்தோர் பணிக்குழு என்று புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இப்பணிக்குழுவின் இயக்குநராக அருட்தந்தை பென்னட் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அருட்தந்தையின் பணிசிறக்க வாழ்த்துகிறோம்.

## Zoom meet

17-04-2022 உயிர்ப்பு பெருவிழா நாளன்று இரவு 8.30 முதல் 9.20 மணி வரை Zoom meet நடைபெற்றது மேதகு ஆயர் அவர்களுடைய ஜெபத்துடன் நிகழ்வு ஆரம்பமானது ஆயர் அவர்கள் ஆன்மீக உரை நிகழ்த்தி இதன் நோக்கத்தையும், மறைமாவட்டத்தின் நிகழ்வுகளையும் குறிப்பிட்டார். Zoom meet -ல் கலந்து கொண்டவர்கள் தங்களை அறிமுகப்படுத்தினர்கள். ஏறத்தாழ 26 பேர் அதில் பங்கு கொண்டார்கள். அடுத்த கூடுகை 16-05-2022 இறை ஊழியர் தேவசகாயம்பிள்ளையின் புனிதர் பட்டத்திற்கு மறுநாள் நடைபெறும்.

# மார் எப்ரேம் நினைவு வெள்ளிவிழா

**நினைவு பாதயாத்திரை**

மார் எப்ரேம் நினைவு வெள்ளி விழாவை முன்னிட்டு 06-04-2022 அன்று நினைவு பாதயாத்திரையானது வெள்ளெலும்பில் வைத்து மேதகு ஆயர் தோமஸ் மார் எவுசேபியோஸ் ஆண்டகையின் தலைமையில் திருப்பலியுடன் ஆரம்பமானது. பிற்பகல் 3 மணிக்கு பின்குளம் ஆலயத்தை வந்தடைந்தது. பின்னர் நினைவு ஆய்வரங்கம் நடத்தப்பட்டது. 07-04-2022 அன்று பின்குளம் ஆலயத்தில் திருப்பலியுடன் பாதயாத்திரை தொடர்ந்து மாலை 5 மணிக்கு பேராலயத்தை வந்தடைந்தது. மேதகு ஆயர் ஜோஷ்வா மார் இக்னாத்தியோஸ் மற்றும் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகைகள் இணைந்து தூப மன்றாட்டு நடத்தி ஜெபித்தார்கள். மாலை 7 மணியளவில் மேறோன் மோர் பெசலியோஸ் கிளீமீஸ் கர்தினால் ஆண்டகை அவர்கள் வருகை தந்து தூப மன்றாட்டு நடத்தி ஜெபித்தார்.



**ஆயர் மார் எப்ரேம் நினைவுச்சின்னம் திறப்பு விழா**

குழித்துறை மேய்ப்பு பணி நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்ட ஆயர் மார் எப்ரேம் நினைவுச்சின்னத்தை 07-04-2022 அன்று மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் அர்ச்சித்து மேய்ப்பு பணி நிலைய வளாகத்திற்கு மார் எப்ரேம் வளாகம் என்று பெயர் சூட்டினார். மேலும் புதிதாக அமைக்கப்பட்ட





மேய்ப்பு பணி நிலைய உணவறை மற்றும் சமையலறையை மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் 07-04-2022 அன்று அர்ச்சித்தார்.

**மார் எப்ரேம் நினைவு வெள்ளிவிழா திருப்பலி**

மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவு வெள்ளிவிழா திருப்பலியானது 08-04-2022 அன்று மார்த்தாண்டம் கிறிஸ்து அரசர் பேராலயத்தில் வைத்து மேதகு ஆயர் ஜோஷ்வா மார் இக்னாத்தியோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் முன்னிலையில் கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலிக்கு பின்னர் நினைவு பொதுக்கூட்டமும், தூப மன்றாட்டும் நடத்தப்பட்டது.



# மறைமாவட்ட மேய்ப்பு பணி அறிவுரைக்குழு

மறைமாவட்ட மேய்ப்பு பணி அறிவுரைக்குழு கூடுகையானது 02-04-2022 அன்று ஆயர் இல்லத்தில் வைத்து மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூடுகையில் மறைவட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பங்கேற்றார்கள். விமலபுரம் பங்கைச் சார்ந்த திரு. அருள்தாஸ் அவர்கள் மறைமாவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக்குழு செயலராக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்.



# Diocesan Pastoral Council Members

### 1.Ex-Officio Members

| S.No. | Fathers Name | |
|---|---|---|
| 1. | Most.Rev.Vincent Mar Paulos | President |
| 2. | Very.Rev.Fr.S.Varghese | Vicar General |
| 3. | Very.Rev.Fr.Jose Bright | Chancellor |
| 4. | Very.Rev.Fr.Satheesh Kumar | Procurator |
| 5. | Very.Rev.Fr.Sunny Mathew | Judicial Vicar |
| 6. | Very.Rev.Fr.Jose | Minor Seminary Rector |

## 2. District Vicars

| S.No | Fathers Name | District |
|---|---|---|
| 1. | Rev.Fr.Aruldhas | Kaliakkavilai |
| 2. | Rev.Fr.Robinson | Kollemkode |
| 3. | Rev.Fr.Jose Bright | Marthandam |
| 4. | Rev.Fr.Franklin Jose | Kulasekaram |
| 5. | Rev.Fr.Micheal | Panachamoodu |
| 6. | Rev.Fr.Maria John | Nagercoil |
| 7. | Rev.Fr.Jibu Mathew | Azhakiamandapam |
| 8. | Rev.Fr.Bennet | Mission Co-Ordinator |

## 3. Catechist

| S.No | Name | |
|---|---|---|
| 1. | Mr.Sathyanesan | Catechist |



## 4. Dirctors & Commission Secretaries

| S.No | Fathers Name | Directors |
|---|---|---|
| 1. | Rev.Fr.Jose Bennet | MCA |
| 2. | Rev.Fr.Johny Alfred | MCYM |
| 3. | Rev.Fr.Jibu Mathew | Sunday School |
| 4. | Rev.Fr.Varghese G. | Legion of Mary &Vincent De Paul |
| 5. | Rev.Fr.John Kumar | Social Apostolate |
| 6. | Rev.Fr.Yesudhas | Arulvazhviyam |
| 7. | Rev.Fr.Arul Shyju | Liturgy |
| 8. | Rev.Fr.Sajith Francis | Evangelization |
| 9. | Rev.Fr.Jebin John | Suvisesha Sangam |
| 10. | Rev.Fr.Sibi | Bible |
| 11. | Rev.Fr.Josephin Raj | Education |
| 12. | Rev.Fr.Devadas | School Aided |
| 13. | Rev.Fr.Vinu Kumar | School Un-Aided |
| 14. | Rev.Fr.Robert | HOM |
| 15. | Rev.Fr.Stephen Mathar | Media |
| 16. | Rev.Sr.Angel Jose | Thaimaar |

## 5. Presidents of Various Association

| S.No | Name | Association |
|---|---|---|
| 1. | Mr.Edward John | MCA |
| 2. | Mr.Milton | MCYM |
| 3. | Mr.Yesu Raj | Sunday School |
| 4. | Mr.Sharma | Legion of Mary |
| 5. | Mr.Yesu Raj | Vincent De Paul |
| 6. | Mr.John | Arulvazhviyam |
| 7. | Mr.Sasan Kumar | Kolping |
| 8. | Mrs. Thadeyus Mary | Thai Maar |
| 9. | Mr.Francis V | Suvisesangam |

## 6. Religious Representatives

| Sl.No | Name | Congregation |
|---|---|---|
| 1. | Very Rev.Mother Anila Christy | D.M |
| 2. | Very Rev.Fr.John Christoper | OIC |
| 3. | Rev.Sr.Theertha | SIC |
| 4. | Rev.Sr.Sophia Josepin | SOC |
| 5. | Rev.Sr.Anice | H.Sp |
| 6. | Rev.Sr.Lilly Rose | St.Joseph |

## 7. Elected Members i. Azhakiamandapam District

| Sl. No. | Parish | Name |
|---|---|---|
| 1. | Chellamkonam | Mr. Justus |
| 2. | Chellamkonam | Mrs. Jesus Donio |
| 3. | Kattuvilai | Mrs. Sutha |
| 4. | Pilankalai | Mr. Raj |

### ii. Kaliakkavilai District

| Sl. No. | Parish | Name |
|---|---|---|
| 1. | Koikkathoppu | Mr. Paul Raj |
| 2. | Adichavilagam | Mrs. Sunitha |
| 3. | Sooriacode | Mr. Rastin |
| 4. | Mecode | Mr. Saleem |

### iii. Kollemcode District

| Sl. No. | Parish | Name |
|---|---|---|
| 1. | Pushpagiri | Mr. Paul Raj.P |
| 2. | Fathimanagar | Mr. C.S. John Benedict |
| 3. | Oorambu | Mrs. Kala Y |
| 4. | Kaduvakuzhi | Mrs. Vijila Rani |



### iv. Kulaseharam District

| Sl. No. | Parish | Name |
|---|---|---|
| 1. | Mathar | Mrs.Thangalet |
| 2. | Mukkampala | Mrs. Selvi |
| 3. | Anakkara | Mr. Lenin Savier |
| 4. | Muthalar | Mr. Silvance |

### v. Marthandam District

| Sl. No. | Parish | Name |
|---|---|---|
| 1. | Vimalapuram | Mr. Aruldhas |
| 2. | Marthandam | Mr. Jose Prasad Godwin |
| 3. | Kuzhithurai | Mrs. Angel |
| 4. | Themanoor | Mrs. Mary Greena |

### vi. Panachamoodu District

| Sl. No. | Parish | Name |
|---|---|---|
| 1. | Arumanai | Mr. Stanly |
| 2. | Kanchiyode | Mr. Prabin K. rajendran |
| 3. | Panachamoodu | Mrs. Sheeja |
| 4. | Vellachipara | Mrs. Kumari B |

### vii. Nagercoil District

| Sl. No. | Parish | Name |
|---|---|---|
| 1. | Christuvilagam | Mrs. Agnes |
| 2. | Beach Road | Mr. John |
| 3. | Navalkadu | Mr. Nadarajan |
| 4. | Erachakulam | Mr. Jayaram |

## 8. Mission

| Sl.No | Name | Place |
|---|---|---|
| 1. | Mr.Augustin | Trichy |
| 2. | Mr.Sherlin | Tirunelveli |
| 3. | Mr.John Justus | Tirunelveli |
| 4. | Sharmila | Devadhanapatti |

## 9. Nominated Members

| S.No | Name | District |
|---|---|---|
| 1. | Mr.Robi | Kaliakkavilai |
| 2. | Mr.Swaraj | Kollemkode |
| 3. | Mr.Kanaga Raj | Kaliakkavilai |
| 4. | Mr.Mohandhas | Panachamoodu |
| 5. | Mr.Rajendra Babu | Kaliakkavilai |
| 6. | Mr.Christal Antony | Nagercoil |
| 7. | Mr.Dr.Bino | Marthandam |
| 8. | Mr.Justin | Kirathoor |
| 9. | Mr.Varghese | Panachamoodu |
| 10. | Mrs.Gnanasaundari | Panachamoodu |

## 10. Special Invitees

| S.No | Name | Place |
|---|---|---|
| 1. | Mrs.Vasantha Kumari | Koicalthoppu |
| 2. | Mr.Chrystal John | Nagercoil |

# குருமடச் செய்திகள்

நமது மறைமாவட்டத்திலுள்ள எல்லாத் திருத்தூயகப் பணியாளர்களுக்கு புனித வாரத்தை முன்னிட்டு புனித வாரத் திருச்சடங்குகளை குறித்து சிறப்பு வகுப்புகள் ஏப்ரல் 19 மற்றும் 20-ம் தேதி ஆகிய நாட்களில் ஒவ்வொரு மறைவட்டத்திலும், மறைவட்ட இயக்குநர் தலைமையில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வோடு இணைத்து 9 மற்றும் அதற்கு மேல் பயிலும் மாணவர்களுக்கு இறையழைத்தல் ஊக்குவித்தல் முகாமும் குருமடத்தின் சார்பாக நடத்தப்பட்டது. இதனை இறையியல், தத்துவவியல் மற்றும் இளங்குருமட மாணவர்கள் வழிநடத்தினார்கள்.



# குருத்துவ அருட்பொழிவு



நமது மறைமாவட்டத்தில் காஞ்சியோடு பங்கைச் சார்ந்த திருத்தொண்டர். சுனீஷ்குமார் மற்றும் சூசைபுரம் பங்கைச் சார்ந்த திருத்தொண்டர் விபின்ஸ் வில்சன் ஆகிய 2 திருத்தொண்டர்கள் 23-04-2022 அன்று மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் திருக்கரங்க ளினால் சூசைபுரம் பங்கில் வைத்து குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டார்கள். புதுக்குருக்களின் பணிசிறக்க மறைமாவட்டத்தின் சார்பாக வாழ்த்துகின்றோம்.

# திருச்சிலுவைப்பாதை



நாற்பதாம் வெள்ளியை முன்னிட்டு இறச்சகுளம் பங்கில் வைத்து நடைபெறுகின்ற திருச்சிலுவை பாதையானது இவ்வருடம் 08-04-2022 அன்று மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர் களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருச் சிலுவைப்பாதையில் மறை மாவட்டத்தின் பல பங்குகளி லிருந்து இறைவிசுவாசிகள் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றுச் சென்றனர்.

# அரைப்பள்ளி புனித தோமையார் திருத்தல திருவிழா

ஆர்த்தடொக்ஸ் சபையின் கீழ் செயல்பட்டு வரும் அரைப்பள்ளி புனித தோமையார் திருத்தல திருவிழாவிற்கு முதன் முறையாக மலங்கரை கத்தோலிக்க வழிபாட்டு முறையில் திருப்பலி நடத்த அனுமதி



வழங்கப்பட்டது. அதற்கிணங்க 20-04-2022 அன்று மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. ஏராளமான இறைமக்கள் இத்திருப்பலியில் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றுச் சென்றனர்.

## ஆயரின் புனித வார கொண்டாட்டங்கள்

இவ்வருடம் மேதகு ஆயர் அவர்கள் குருத்தோலை திரு விழாவை மார்த்தாண்டம் கிறிஸ்து அரசர் பேராலயத்திலும், பாதம் கழுவுதல் திருச் சடங்கை விமலபுரம் பங்கிலும், புனித வெள்ளி மற்றும் உயிர்ப்பு திருச் சடங்கினை பின்குளம் பங்கிலும் நடத்தினார்.





# மேரி மக்கள் துறவற சபை

### பொன்விழா மற்றும் வெள்ளிவிழா நிறைவு



2021-2022-ஆம் ஆண்டின் பொன்விழா காணும் அருட் சகோதரிகள் Sr. ஜெயா, Sr. பாவனா Sr. பியூலா மற்றும் வெள்ளி விழா காணும் அருட்சகோதரிகள் Sr. தீப்தி மரியா, Sr. மேரி ஆனந்த், Sr.மேபல் ஜோஸ் Sr.ராணி மரியா, Sr.மேரி பிரகாஷ் மற்றும் Sr.குளோரியா ஆகியோரின் ஜூபிலி நிறைவுவிழா கொண்டாட்டங்கள் மேரி மக்கள் துறவற சபையின் தாய் இல்லத்தில் வைத்து 19-04-2022 மற்றும் 20-04-2022 ஆகிய நாட்கள் நடைபெற்றது. இதில் மேதகு ஆயர் மற்றும் குருக்கள் பங்கேற்றார்கள்.

### Little Missiories Camp



மேரி மக்கள் துறவற சபையில் இறையழைத்தலை ஊக்கப்படுத்தும் நோக்குடன் Little Missiones camp நடைபெற்று வருகிறது. 03-04-2022 அன்று பனச்சமூடு பங்கில் வைத்து இம்முகாம் நடைபெற்றது. இதில் சுமார் 20 மாணவிகள் பங்கேற்றனர்.

### மண்டல மறைப்பணி கூடுகை (Mission Zonal meet)



மார்த்தாண்டம் மண்டலத்தில் பணிபுரியும் அனைத்து அருட் சகோதரிகளும் இணைந்து நடத்தப்பட்ட கூடுகை 04-04-2022 அன்று விமலபுரம் துறவற இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இதில் அனைத்து அருட் சகோதரிகளும் பங்கேற்றார்கள்.

# பெதனி நவஜீவன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

## ஆலோசனை வழங்கும் நிகழ்வு

பெதனி நவஜீவன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் ஹிந்துஸ்தான் சாரணசாரணியர் இயக்கம் சார்பாக மாணவர்களுக்கு சிறப்பு முகாம் 24/03/2022 முதல் 26/04/2022 வரை நடைபெற்றது. இப்பயிற்சி முகாமில் மாணவர்களுக்கு தலைமைத்துவப்பண்பு, ஒழுக்கம் மற்றும் சமூக





சேவை குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும் நெருப்பின்றி சமைத்தல், கூடாரம் அமைத்தல் போன்ற குழுப்போட்டி களும் நடைபெற்றது.

## பெற்றோர் ஆசிரியர் கூடுகை

மழலையர் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களின் பெற்றோர் ஆசிரியர் கூட்டமானது 09/04/2022 அன்று நடைபெற்றது. மாணவர்களின் பெற்றோர்கள் மிகுந்த




ஆர்வத்துடன் பங்குபெற்று தங்கள் கருத்துக்களைக் கூறினார்கள்.



# CHRISTURAJA MATRICULATION SCHOOL MARTHANDAM

## கருத்தரங்கம்

11-04-2022 அன்று 8 மற்றும் 9-ம் வகுப்பு மாணவர்களுக்கும், 12-04-2022 அன்று 6 மற்றும் 7-ம் வகுப்பு மாணவர்களுக்கும் நாமக்கல்லை சேர்ந்த அருட்தந்தை. ரெக்ஸ் SDB அவர்களால் ஒரு நாள் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதில், கைபேசி பற்றிய விழிப்புணர்வு கொரோனா தொற்றுக்குப்பின் நாம் சந்திக்கும் சவால்கள் மற்றும் தன்னம்பிக்கை போன்ற தலைப்புகளில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

## 'DEW SPLASH 2022'

1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளின் திறமைகளை சோதிக்கும் போட்டியானது 'DEW SPLASH 2022' என்னும் தலைப்பில் 19-04-2022 முதல் 22-04-2022 வரை வகுப்பு வாரியாக நடத்தப்பட்டது. இதில், மாணவ மாணவிகள் உற்சாகத்துடன் கலந்து கொண்டு, தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.



## போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு

20-04-2022 அன்று மத்திய அரசின் நிறுவனமான "Nasha mukt Bharat Abhiyan" உடன் "Social welfare Association" மற்றும் "women's welfare Association" இணைந்து 'போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு'' முகாமானது நடத்தப்பட்டது. இம்முகாமை 'கருங்கல் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி" ஆங்கிலத்துறை தலைவர் Dr. பிரனேஷ் குமார் மற்றும் தமிழ்துறை தலைவர் Dr. ஆக்னஷ் ஜெயலெட் ராணி ஆகியோரால் நடத்தப்பட்டது.



## இறைவேண்டல் திருப்பலி

2021- 2022-ம் கல்வி ஆண்டிற்கான 'அரசு பொதுத்தேர்வுக்கு' மாணவ மாணவிகளை ஆயத்தமாக்கும் இறைவேண்டல் திருப்பலியானது, மார்த்தாண்டம் மறைமாவட்டத்தை சார்ந்த அருட்தந்தை வினு இம்மானுவேல் அவர்களால், பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு 09-04-2022 அன்றும் 12-ம் வகுப்பு மாணவர்களுக்கு 20-04-2022 அன்றும் நடத்தப்பட்டது. இதில் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு இறையாசி பெற்றுக் கொண்டனர்.

# பெதனி நவஜீவன் CBSE மேல்நிலைப்பள்ளி

**மாவட்டஅளவிலானசதுரங்கப்போட்டி**

கன்னியாகுமரி மாவட்ட அளவிலான சதுரங்கப் போட்டி 20-3-2022 அன்று நாகர்கோவில் மீனாட்சிபுரம் A.S.T திருமணமண்டபத்தில் வைத்து நடத்தப்பட்டது. அதில் 11வயதுக்குட்பட்டவர்களுக்கான பிரிவில்5-ஆம் வகுப்பு ரோஜா பிரிவைச் சார்ந்த ரா.மி.பிரதீக்ஷா கலந்து கொண்டு, 6 சுற்றுகளில் 4 புள்ளிகளைப் பெற்று ஏழாவது இடத்தைப் பெற்றுள்ளார். அதுமட்டுமின்றி 25-வயதுக்குட்பட்டோர் பிரிவில் 9-ஆம்வகுப்பு ரோஜா பிரிவைச்சார்ந்த ரா. மி.பிரியதர்ஷினி 19-வது இடத்தையும், 13-வயதுக்குட் பட்டவர்களுக்கான பிரிவில் 7-ஆம் வகுப்பு முல்லை பிரிவை சார்ந்த ஜா.ஜெ.ஜிஜோ16-வது இடத்தையும் பெற்றுள்ளார் என்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.



**நிறைவு விழா**

இந்துஸ்தான் சாரணர் மற்றும் சாரணியர் சங்கத்தின் நிறைவுவிழா 26/3/2022 அன்று, பெதனி கலை அரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தேசிய அமைப்பு ஆணையர் கேஎஸ்.சௌகான் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக ஜஸ்டின்ராஜ். T.P.S. மதுரை மண்டல எஸ்சி/ எஸ்டிவிஜிலென்ஸ் துணைக் கண்காணிப்பாளர் சிறப்புரையாற்றினார்.



**தொடக்கவிழா**

2022-2023-ஆம் கல்வியாண்டிற்கான 10 மற்றும் 12-ஆம் வகுப்பு தொடக்கவிழா 26-03-2022 அன்று நடைபெற்றது. பெதனி நவஜீவன்



சி.பி.எஸ்.சி மேல்நிலைப் பள்ளியின் தாளாளர் ஜாண்கிறிஸ்டோபர் OIC மற்றும் பெதனி நவஜீவன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் முதல்வர் ஜார்ஜ்தாமஸ் OIC மற்றும் ஆசிரியர்கள் இணைந்து இறைவேண்டல் செய்தார்கள். இதில் பெற்றோர்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.



**துப்பாக்கிசூட்டில்முதலிடம்**

தேசிய மாணவர் படையின் 11வது தமிழ்நாடு பெட்டாலியன் பிரிவில் ஏப்ரல் 5 ஆம் நாள் நடந்த துப்பாக்கி சுடும் போட்டியில் 30பேர் தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்ட 30 பேருக்கும் ஏப்ரல் 6- ஆம்நாள் அடுத்தகட்ட போட்டியானது நடைபெற்றது. அதில் பெதனிநவஜீவன் சி.பி.எஸ்.இ மேல்நிலைப்பள்ளியில் 8-ஆம்வகுப்பு அல்லி பிரிவை சேர்ந்த ஜாண் போஸ்கோ என்ற மாணவன் கொடுக்கப்பட்ட இலக்கிற்கு ஒரு சென்டிமீட்டருக்குள் குறிவைத்து சுட்டு முதலிடத்தைப் பிடித்தார். இம்மாணவனை தல்சானிக்முகாமில் தேர்வு செய்யப்பட்டதோடு மட்டுமல்லாமல் இடையாப்பட்டி தேசிய பாதுகாப்பு அகாடமியில் (NDA) பத்துநாள் துப்பாக்கிச்சுடும் பயிற்சிக்காக தேர்வுச்செய்யப்பட்டுள்ளான் என்பது மகிழ்ச்சியைத் தருகிறது.



## LITTLE FLOWER MATRICULATION SCHOOL
## PUSHPAGIRI

### தவக்கால நிகழ்வுகள்

**LITTLE FLOWER MATRIC & CBSE** பள்ளியில் பயிலும் கிறிஸ்தவ மாணவர்களுக்கு 25-03-2022 அன்று பள்ளியின் முதல்வர் Rev Sr Joby George DM அவர்கள் ஒப்புரவு அருட்சாதன தயாரிப்பு வகுப்பு நடத்தினார்கள். 28-03-2022 மற்றும் 29-03-2022 ஆகிய நாட்களில் சுமார் 400 மாணவர்கள் தகுந்த தயாரிப்புடன் ஒப்புரவு அருட்சாதனம் பெற்றுக் கொண்டார்கள்.

### நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள் (மத்தேயு 25 : 35)

தவக்காலத்தை முன்னிட்டு தினமும் மாணவர்கள் வகுப்பு வாரியாக கொண்டு வருகின்ற உணவு ஏழைகளுக்கும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது. சிறப்பாக 12-ம் வகுப்பு மாணவர்கள் கொண்டு வந்த உணவை பள்ளியின் முதல்வர் Rev Sr Joby George மற்றும் மாணவர்கள் இணைந்து சாலையோரங்களில் அமர்ந்திருந்த ஏழைகளுக்கு வழங்கினார்கள்.





## St. Mary's CBSE School, Mariagiri

### பெற்றோர் ஆசிரியர் கூடுகை

இக்கல்வியாண்டின் பெற்றோர் ஆசிரியர் கூடுகையானது 09-04-2022 அன்று பள்ளியின் தாளாளர் Rev. Fr. Vinukumar அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 1-ம் வகுப்பு முதல் 7-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் இக்கூடுகையில் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை பகிர்ந்தார்கள்.



## MARY MOUNT CBSE SCHOOL
## ANAKKARAI

### இலக்கிய மன்ற விழா

Mary Mount CBSE பள்ளிக்கூடத்தின் இலக்கிய மன்ற விழாவானது 05-04-2022 அன்று மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அருட்தந்தை ஸ்டீபன் மாத்தார், அருட்சகோதரி கிறிஸ்டி மரியா DM. ஆசிரியைகள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டார்கள்.



# MCA

## Diocese of Marthandam

### MCA கூடுகை

MCA கூட்டமானது 17.4.2022 அன்று Fr. Jose Bennet அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. மே-1 பொது நிலையினர் தினம் சிறப்பாக கொண்டாட வேண்டும் எனவும், June 9,10 ஆகிய தினங்களில் வேளாங்கண்ணி சுற்றுலா பற்றியும் கலந்துரையாடப்பட்டது. Light- 2022 programme மே 24,25,26 ஆகிய தினங்களில் மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் வைத்து நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டது.



### திருமணஆயத்தப்பயிற்சி

**மே** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 20, 21 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



# மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி கிராத்தூர்

## குடியரசுதினவிழா (Republic Day celebration 2022, Online)



மார் கிறிஸோஸ்டம் கல்வியியல் கல்லூரியில் 25-01-2022 அன்றுகாலை 10.00 மணியளவில் முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு மாணவர்களுக்கு குடியரசுதின விழாவினை சிறப்பிக்கும் பொருட்டு Online– ல் பலவிதமான போட்டிகள் நடத்தப்பட்டது. மேலும் 26-01-2022 அன்று உதவிப் பேராசிரியர் திரு. ஜிஜின் துரை (மார் எஃப்ரேம் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி இலவுவிளை) அவர்கள் தலைமையில் குடியரசுதின விழா கூட்டமானது நடைபெற்றது.

## பெற்றோர் ஆசிரியர் கழக கூடுகை

26-03-2022 அன்று காலை 9.30 மணியளவில் பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டமானது நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மார்த்தாண்டம் மறைமாவட்டஆயர் மேதகு. வின்சென்ட் மார் பவுலோஸ்ஆண்டகை அவர்கள் கலந்துகொண்டார். மேலும் பெற்றோர்கள் கலந்துரையாடல் நடைபெற்றது.

## பெண்கள் தினவிழா (Women's Day Celebration 2022)

பெண்கள் தின விழாவானது 9-03.2022 அன்று காலை 10.00 மணியளவில் இறைவணக்கப் பாடலுடன் பெண்கள் தினவிழா நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. சிறப்பு விருந்தினர் திருமதி. அபிஷா கெவின் (JCI India zone trainer) அவர்களும் அவரது குழுவினரும் பெண்கள் தின விழா பற்றிய சிறப்பு செய்தியினை வழங்கினார்கள்.



### செயல்முறைதேர்வு (Practical Examination 2022)

கிராத்தூர் மார் கிறிஸோஸ்டம் கல்வியியல் கல்லூரியில் 31-03-2022 மற்றும் 10-4-2022 ஆகிய இரண்டு நாட்கள் இரண்டாமாண்டு மாணவர்களுக்கு செயல்முறைத் தேர்வு நடைபெற்றது. இந்த செயல் முறைத்தேர்வை பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளர் Dr. சுப்ரமணியன் (Dept. of Educational Planning Administration, TNTEU Chennai) உறுப்பினர் திருமதி. பெருந்தேவி (உதவிப் பேராசிரியர் கே.சி. கல்வியியல் கல்லூரி, கூடலூர்)ஆகியோர் செயல்முறைத் தேர்வினை நடத்தினார்கள்.

### கலை விழா 2022 (Arts Day)

6-04-2022 மற்றும் 7-04-2022 ஆகிய இரண்டு நாட்கள் கலைவிழாவானது வெகுசிறப்பாக நடைபெற்றது. விழாவில் மாணவ மாணவிகளுக்கான கலைப் போட்டிகள் நடைபெற்றது. பல மாணவமாணவிகள் போட்டிகளில் திறம்படகலந்து கொண்டு பரிசுகளை வென்றனர்.

### விளையாட்டு விழா (Sports Day)2022

15வது ஆண்டு விளையாட்டு விழாவானது 9-04-2022 அன்று புனித எஃப்ரேம் மேல்நிலைப்பள்ளி, சூரியகோட்டில் வைத்து நடைபெற்றது. காலை 10.00 மணியளவில் திரு. சூசைநாயகம் (அரசு மேல் நிலைப்பள்ளி, ஏழுதேசப் பற்று) கொடியேற்றி விளையாட்டு போட்டிகளை துவக்கிவைத்தார். மாணவர்கள் அணிவகுப்பு நடத்தப்பட்டது. தொடர்ந்து விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும், கேடயங்களும் வழங்கப்பட்டன.




### ஈஸ்டர் தினவிழா (Easter Celebration)

கல்லூரியில் 18-04-2022 ஈஸ்டர் தினவிழாவானது முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு மாணவர்கள் இணைந்து நடத்தினார்கள். சிறப்புவிருந்தினர். Rev. Dr. Sunny Mathew(Major Seminary Rector, Thiruvananthapuram) அவர்கள் ஈஸ்டர் சிறப்பு செய்தியினை வழங்கினார்.



# மலங்கரை கத்தோலிக்க கல்லூரி மரியகிரி

### திருப்பலி

மங்கள வார்த்தை திருநாளை முன்னிட்டு 25.03.2022 அன்று புனிதவிண்ணேற்பு அன்னை தேவாலய அருட்தந்தைவினுகுமார் அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

### உயிர்வேதியியல் துறை

உயிர்வேதியியல் துறைசார்பில் 06.04.2022 மற்றும் 07.04.2022 ஆகிய இருதினங்களில் பயிற்சி பட்டறையானது நடத்தப்பட்டது. 06-04-2022 அன்று பாலோடு, ஜவகர்லால் நேரு வெப்பமண்டல தாவரவியல் பூங்காமற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தை இளங்கலை மூன்றாமாண்டு மாணவர்கள் சந்தித்தார்கள். 09.04.2022 அன்று சூரியகோடு மார் எப்ரேம் நினைவு மேல்நிலைப்பள்ளியில் வைத்து உயிர் வேதியியல் துறைசார்பில் மருத்துவ முகாமானது நடத்தப்பட்டது. மருத்துவமுகாமில் இரத்தத்தில் உள்ள சர்க்கரை, கொழுப்பு மற்றும் ஹீமோகுளோபின் அளவு ஆகியவை கண்டறியப்பட்டது. கல்லூரியின் தாளாளர் அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் மருத்துவ முகாமினை துவங்கிவைத்தார்கள்.



### நுண்ணுயிரியல் துறை



30-03-2022 அன்று நுண்ணுயிரியல் துறை சார்பில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. கருத்தரங்கின் சிறப்பு விருந்தினராக திருவனந்தபுரம் ஆத்மிபயோடெக் நிறுவனத்தின் நிறுவனர் திரு ஆஸ்டின் அவர்கள் வருகை புரிந்து ஆராய்ச்சி மேற்கொள்ளும் போது ஏற்படும் சவால்களை எப்படி கையாளலாம் எனும் தலைப்பில் விளக்கமளித்தார்.

### நாட்டு நலப்பணித்திட்டம் மற்றும் தேசியமாணவர் படை

போதை விழிப்புணர்வு இருசக்கரவாகன பேரணியானது நாட்டு நலப்பணித் திட்டம், தேசியமாணவர் படை மற்றும் மாவட்ட மதுவிலக்கு



அமலாக்க பிரிவு சார்பில் நடைபெற்றது. விழிப்புணர்வு பேரணியை கல்லூரியின் தாளாளர் அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் துவங்கி வைத்தார்கள். களியக்காவிளை காவல் நிலைய சப்இன்ஸ்பெக்டர் திரு. ஜெயசேகரன் மற்றும் மதுவிலக்கு அமலாக்க துறை இன்ஸ்பெக்டர் திருமதி. ஜென்சி ஆகியோர் போதைபொருட்களால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பேசினார். பேரணியானது நான்கு பள்ளிக்கூடங்களுக்கு சென்று விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

**உயிர் தொழில்நுட்பவியல் துறை**



உலக அறிவியல் தினத்தை முன்னிட்டு துறைசார்பில் ஆராய்ச்சி கட்டுரைகள் சமர்பித்தல் போட்டியானது நடத்தப்பட்டது. விழாவின் சிறப்பு விருந்தினராக மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை கழக பேராசிரியர் முனைவர் உமா அவர்கள் கலந்து கொண்டார்கள்.

உயிர் தொழில்நுட்பவியல் துறை சார்பில் 05-04-2022 முதல் 07-04-2022 ஆகிய 3 தினங்களில் பயிற்சி பட்டறையானது நடத்தப்பட்டது. திருவனந்தபுரம் எச்செல்லோகன் ஆராய்ச்சி மைய பயிற்சியாளர்களால் பயிற்றுவிக்கப்பட்டது.

**வணிகவியல் துறை**

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் வைத்து நடைபெற்ற வணிகவியல் வினாடிவினாபோட்டியில் இளங்கலை மூன்றாமாண்டு பயிலும் அனந்து மற்றும் கிரண் மோகன் மூன்றாமிடமும், சிறந்த மேலாளர் போட்டியில் ஸ்டெனி ராஜ் டேவிட்சன் மூன்றாமிடமும் மார்டின் மற்றும் அஸ்வின் டம் சார்ட் போட்டியில் மூன்றாமிடமும் பெற்றார்கள்.





# பெதனி நவஜீவன் B.Ed. கல்லூரி

## பெதனிநகர், வேங்கோடு

**உளவியல் சோதனை பயிற்சி வகுப்பு (Psychological Expriment)**

பெதனி நவஜீவன் கல்வியல் கல்லூரியில் 2022, மார்ச் 23-ம் தேதி 'கவன வீச்சு' (Span of Attention) என்ற தலைப்பில் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் பெர்னட் அவர்கள் பள்ளி மாணவர்களுக்கு கவன வீச்சு பரிசோதனை எவ்வாறு நடத்தி அவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவது என்பது பற்றி உரையாற்றினார். அதனை தொடர்ந்து ஆசிரிய பயிற்சி மாணவ மாணவிகளுக்கு எவ்வாறு உளவியல் பரிசோதனை செய்வது என்பது பற்றி சிறப்பு பயிற்சியளிக்கப்பட்டது.

**சிறப்பு வகுப்பு** (Special Class)

பெதனி நவஜீவன் கல்வியியல் கல்லூரியில் 2022, மார்ச் 24 மற்றும் 25-ம் தேதி "yes, i can" மற்றும் Leadership, Life Expreience and IQ" என்ற தலைப்புகளில் சிறப்பு வகுப்பு நடைபெற்றது. இதில் National commissioner of Hindustan Scount and Guide Dr. K.S. Chauhan (Former captain, Indian Army) அவர்கள் கலந்துக்கொண்டு வருங்கால ஆசிரியர்களுக்கு தேவையான தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளும் விதமாக உளவியல் ரீதியான கருத்துக்களை மேற்கோள்காட்டினார். அதனை தொடர்ந்து ஆசிரிய மாணவ மாணவிகளுக்கு நுண்ணறிவு சோதனை நடத்தப்பட்டது.

**உளவியல் சோதனை பயிற்சி வகுப்பு** (Psychological Experiment)

பெதனி நவஜீவன் கல்வியியல் கல்லூரியில் 2022, ஏப்ரல் 4-ம் தேதி "muller Lyer Illussion" என்ற தலைப்பில் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் பெர்னட் அவர்கள் மாணவர்களுக்கு 'முல்லர் லையர் மாயைதோற்றம்" பரிசோதனை எவ்வாறு நடத்தி அவர்களின் புலனுணர்வு செயல்முறை அளவை கண்டறிவது என்பது பற்றி உரையாற்றினார். அதனை தொடர்ந்து பள்ளி மாணவ மாணவிகளிடத்தில் இச்சோதனை எவ்வாறு நடத்துவது என்பது பற்றி சிறப்பு பயிற்சியளிக்கப்பட்டது.

**ஆலோசனை கூடுகை**

HOM அலுவலகபணியாளர்கள் மற்றும் ஆர்கனைசர்களின் மாதாந்திர ஆலோசனை கூட்டம் 07.04.2022 அன்று HOM அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை ராபர்ட் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் நடைபெற்றது. HOM பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

- மார்த்தாண்டம், நாகர்கோவில், கன்னியாகுமரி, கொட்டாரம் ஆகிய பகுதிகளில் மருத்துவ முகாம்கள் மற்றும் ஆரோக்கியம் சம்மந்தமான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவது தீர்மானிக்கப்பட்டது.
- குழுக்களில் வருடாந்திர கணக்கு தணிக்கை வரும் மேய் மாதம் முதல் துவங்க தீர்மானிக்கப்பட்டது. அதற்கான ஏற்பாடுகளை ஆர்கனைசர்கள் செய்யுமாறு இயக்குநரால் கேட்டுக் கொள்ளப்பட்டது.
- மார்த்தாண்டம் மறை மாவட்ட முதல் ஆயர் மேதகு லாரன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் 25-ம் ஆண்டு நினைவு தின விழாவை முன்னிட்டு ஏப்ரல் 8-ம் தியதி மார்த்தாண்டம் பேராலயத்தில் வைத்து நடைபெற்ற நிகழ்ச்சியில் மார் எப்ரேம் நினைவு திருமண நிதி உதவி மேதகு ஆயர் வின்சன்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களால் 4 ஏழை பெண்களுக்கு வழங்கப்பட்டது.
- மார்த்தாண்டம் மறைமாவட்ட Ambulance சேவை தேவைப்படும் பயனாளிகள் HOM இயக்குநர் அல்லது குழித்துறை HOM அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**Health For One Million**, 9/41, Kuzhithurai
**Ph : 04651 - 260749, 208460**
**இயக்குநர் : அருட்தந்தை ராபர்ட் 7598090355**
Ambulance Driver : **Rajesh - 6238538707**





**வினாடிவினா போட்டி**



மார் எப்ரேம் ஆண்டகையின் 25-ம் ஆண்டு நினைவு வெள்ளிவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட வினாடிவினாபோட்டியானது 02-04-2022 அன்று குழித்துறை ஆலயத்தில் வைத்து அருட்தந்தை அஜீஷ் ஜோகன் அவர்களால் நடத்தப்பட்டது. மார்த்தாண்டம் மறைவட்டம் தேமானூர் பங்கை சார்ந்த செல்வி Alisha. H முதலிடமும், கொல்லங்கோடு மறைவட்டம் மஞ்சதோப்பு பங்கை சார்ந்த செல்வி. Vijaya Shalini இரண்டாம் இடமும் பெற்றுக்கொண்டார்கள்.

**குமரிமக்கள் நல்லிணக்க கூட்டம்**




குமரிமக்கள் நல்லிணக்க கூட்டமைப்பானது 26-03-2022 அன்று நாகர்கோவில் Holy Cross கல்லூரி வளாகத்தில் வைத்து நடைப்பெற்றது. இந்நிகழ்வில் மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோணி ஆல்பிரட் அருட்சகோதரி ஊக்குநர் Sr. Flower John DM மற்றும் இளைஞர்கள் கலந்துக்கொண்டார்கள்.

## RESOURCE TEAM TRAINING

சபை அளவிலான Resource TeamTraining 03-04-2022 அன்று பட்டம் தூய மரியன்னை பேராலயத்தில் வைத்து நடைப்பெற்றது. இளைஞர் இயக்கத்தின் ஆயர்மாமன்ற பணிக்குழு தலைவர் மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார்கள். Tanio என்ற தலைப்பில் பயிற்சியானது நடைப்பெற்றது. இந்நிகழ்வில் மறைமாவட்ட MCYM செயற்குழு உறுப்பினர்கள் கலந்துக்கொண்டார்கள்.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## புற்றுநோய் விழிப்புணர்வு கருத்தரங்கு




மிட்ஸ் மற்றும் மரியகிரி மலங்கரை கத்தோலிக்க கல்லூரி முதுநிலை சமூக பணித்துறை மாணவிகள் இணைந்து நடத்திய புற்றுநோய் விழிப்புணர்வு கருத்தரங்கம் 08.04.2022 அன்று மங்காடு புனித ஜார்ஜியார் ஆயலத்தில் நடைபெற்றது. ஆறுதேசம் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் அஜிஷன் அவர்கள் புற்றுநோய் விழிப்புணர்வு குறித்த கருத்துரை வழங்கினார்கள்.

## சமூக பாதுகாப்பு தினம்

சமூக பாதுகாப்பு குறித்து மேலும் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக 12.04.2022 அன்று மாலை 3 மணிக்கு மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து சமூக




பாதுகாப்பு தினம் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் தலைமையேற்று நடத்தினார்கள். எல்.ஐ.சி யின் குழித்துறை கிளை துணை மேலாளர் திரு.பிரசாந்த் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு காப்பீட்டின் முக்கியத்துவம் மற்றும் அதன் நன்மைகள் குறித்து விளக்கமளித்தார்கள். உறுப்பினர் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினராக இருந்து இறந்து போன இரண்டு உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு இறப்பு நிதியாக ரூபாய் 20,000 மற்றும் பலா மரக்கன்றுகளும் வழங்கப்பட்டது. மேலும் இந்த பணிகளை ஆர்வமுடன் செய்து வரும் மிட்ஸ் களப்பணியாளர்களை ஊக்குவிக்கும் விதமாக அவர்களுக்கும், மிட்ஸ் ஆண்டறிக்கையிலிருந்து நடத்திய வினாடி வினா போட்டியில் முதல் மூன்று இடங்களை வென்ற பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

## கடன் உதவித்திட்டங்கள்

1. 29.03.2022 அன்று மிட்ஸ் ஜூபிலி திட்டமான கழிவறை கட்டும் திட்டத்தற்காக 25 பயனாளிகளுக்கு இரண்டாம் கட்டமாக நபருக்கு ரூபாய் 4,200 வீதம் 1,05,000 வழங்கப்பட்டது.



2. 20.04.2022 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக நாகர்கோவில் பணி மண்டலத்தின் 7 மிட்ஸ் சுய உதவி குழுக்களில் உள்ள 20 உறுப்பினர்களுக்கு ரூபாய் 10,50,000 கடனாக வழங்கப்பட்டது.




3. மிட்ஸ் வெள்ளி விழா திட்டமான வான்கோழி வளர்ப்பு திட்டத்திற்காக 25 பயனாளிகளுக்கு நபருக்கு 10 வான்கோழி குஞ்சுகள் வீதம் மொத்தம் 250 வான்கோழிகள் வழங்கப்பட்டன.

## பிற நிகழ்வுகள்

1. 06.04.2022 மற்றும் 07.04.2022 ஆகிய இரு தினங்கள் திருச்சி தமிழக சமூகப் பணி மையத்தில் வைத்து நடைபெற்ற DSSS Staff Orientation and Detailed Implementation Plan கூட்டத்தில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார், திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி.வினிதா ராணி, மற்றும் களப்பணியாளர்கள் திருமதி.சஜிதா, திருமதி.பேபி சரோஜா ஆகியோர் கலந்து கொண்டார்கள்.
2. 09.04.2022 அன்று குழந்தைகள் பாராளுமன்ற கூட்டம் மணலியில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் 23 குழந்தைகள் கலந்து கொண்டார்கள்.
3. 18.04.2022 அன்று மார்த்தாண்டம் மறைமாவட்டத்தில் புதிதாக மிட்ஸ் அலுவலகம் அருகே துவங்கப்பட்ட ஆண் Mineral Water & Boiling Unit மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் ஆசீர் வதித்து திறந்து வைத்தார்கள்.



# மறைவட்ட செய்திகள்

## மார்த்தாண்டம் மறைவட்டம்

### தூயக பணியாளர்களின் கூடுகை

மார்த்தாண்டம் மறைவட்ட தூயக பணியாளர்கள் கூடுகை 03-04-2022 அன்று உண்ணாமலைக்கடை பங்கில் வைத்து நடைபெற்றது. இக்கூடுகையின் முதல் பகுதியில் அருட்தந்தை பெனடிக்ட் அனலின் அவர்கள் இறையழைத்தல் பற்றி வகுப்பு எடுத்தார். இரண்டாம் பகுதியில் புனித வாரத்தில் தூயக பணியாளர்கள் கவனிக்க வேண்டியவை குறித்து அருட்சகோதரர்கள் வகுப்பு எடுத்தார்கள்.



### MCYM

மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவு வெள்ளிவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட மறைவட்ட அளவிலான வினாடிவினா போட்டியானது 27-03-2022 அன்று அருட்தந்தை வில்பின் விஜு அவர்களால் உண்ணாமலைக்கடை பங்கில் வைத்து நடத்தப்பட்டது. மறைவட்ட பங்குகளிலிருந்து மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## களியக்காவிளை மறைவட்டம்

## MCYM

### தலைமைத்துவ பயிற்சி

மறைவட்ட இளைஞர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி வகுப்பானது 20-03-2022 அன்று மீனச்சல் பங்கில் வைத்து நடைப்பெற்றது. இப் பயிற்சியை கோட்டாறு மறை மாவட்டத்தை சார்ந்த சகோதரர்





மனோஜ் அவர்கள் சிறப்பாக வழிநடத்தினார்கள். மறைவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் மறைவட்ட MCYM-த்தின் ஆண்டு திட்டத்தை வெளியிட்டு ஆசியுரை வழங்கினார்.

### சிலுவைப்பாதை



தவக்காலத்தை முன்னிட்டு மறைவட்ட இளைஞர்கள் இணைந்து நடத்திய ஒருங்கிணைந்த சிலுவைப் பாதை மங்காடு ஆலயத்தில் வைத்து நடைப்பெற்றது. அருட்தந்தை வினுகுமார் அவர்கள் ஆசியுரை வழங்கினார். சுமார் 60 இளைஞர்கள் சிலுவைப்பாதையில் கலந்துக்கொண்டார்கள்.

### தூயகப்பணியாளர்கள் கூடுகை

மறைவட்ட தூயகப்பணியாளர்கள் கூடுகை 02-04-2022 அன்று மலங்கரை கத்தோலிக்க கல்லூரியில் வைத்து நடைப்பெற்றது. அருட்சகோதரர்கள் இக்கூடுகையை வழிநடத்தினார்கள். பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் தன்னுடைய இறையழைத்தல் அனுபவத்தை பகிர்ந்துக்கொண்டார்.



## கொல்லங்கோடு மறைவட்டம்

### குருக்கள் கூடுகை

மறைவட்ட குருக்கள் கூடுகையானது 28-03-2022 அன்று மஞ்சத்தோப்பு பங்கில் வைத்து மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை ராபின்சன் அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. இக்கூடுகையில் கூட்டொருங்கியக்க திருஅவை என்னும் தலைப்பில் மறைவட்ட பங்குகளில் வகுப்புகள் எடுக்க தீர்மானிக்கப்பட்டது.



## குலசேகரம் மறைவட்டம்

தவக்காலத்தை முன்னிட்டு மறைவட்ட பங்குகள் அனைத்தும் இணைந்து மறைவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை பிரங்கிளின்

ஜோஸ் அவர்கள் தலைமையில் உணவுப்பொருட்களை சேகரித்து 10-04-2022 அன்று தடிக்காரன்கோணம் பெண்கள் மனநிலை காப்பகத்திற்கு சென்று வழங்கினர். இந்நிகழ்வில் மறைவட்ட குருக்கள் அருட்கன்னியர்கள் மற்றும் இறைமக்கள் கலந்துக்கொண்டார்கள்.

## நாகர்கோவில் மறைவட்டம்

### MCYM





மறைவட்ட இளையோர் இயக்க கூடுகையானது இறச்சகுளம் பங்கில் வைத்து 27-03-2022 அன்று நடைபெற்றது. இக்கூடுகையின் இறுதியில் வினாடிவினா போட்டியும் அதனை தொடர்ந்து திருச் சிலுவை பாதையும் நடத்தப் பட்டது.

### குருக்கள் கூடுகை

நாகர்கோவில் மறைவட்ட குருக்களின் கூடுகையானது 19-4-2022 கன்னியாகுமரி மலங்கரை பவனில் வைத்து நடைபெற்றது. இதில் நாகர்கோவில் மறைவட்ட குருக்கள் கலந்துகொண்டார்கள். மறை மாவட்டம் மற்றும் மறைவட்டத்தின் வளர்ச்சி குறித்து ஆலோசிக்கப்பட்டது.

## பனச்சமூடு மறைவட்டம்

### தூயகபணியாளர்கள் கூடுகை



02-04-2022 அன்று காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை பனச்சமூடு தேவாலயத்தில் வைத்து தூயக பணியாளர்கள்



பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. அருட்சகோதரர்கள் திருப்பலியை குறித்தும், புனித வாரம் குறித்தும் வகுப்பு எடுத்தார்கள்.

### புனரமைக்கப்பட்ட ஆலயம்



காஞ்சியோடு ஆலயத்தில் புதிதாக புனரமைக்கப்பட்ட பலிபீடமானது 21-04-2022 அன்று மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களால் அர்ச்சிக்கப்பட்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

## அழகியமண்டபம் மறைவட்டம்

### மறைக்கல்வி சிறப்பு வகுப்பு

அழகியமண்டபம் மறைவட்ட மறைக்கல்வி ஆசிரியர்களுக்கு ஏப்ரல் 27-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று மறைக்கல்வி சிறப்பு வகுப்பு நடத்தப்பட்டது. ஏறக்குறைய 60 ஆசிரியர்கள் கலந்துக் கொண்டு பயனடைந்தனர். அருட்தந்தை ரெதிஷ் அவர்கள் திருவிவிலியத்தை குறித்து வகுப்பு நடத்தினார். வகுப்புக்கு பின் அனைத்து ஆசிரியர்களுக்கும் விவிலிய வினாடிவினா நடத்தப்பட்டது.

### வீடில்லாதவர்களுக்கு வீடு – நன்கொடை

நமது திருஅவையின் தலைவரும் தந்தையுமாகிய மோறன் மோர் பசேலியோஸ் கிளிமீஸ் காதோலிக்க பாவா அவர்கள் வீடு இல்லாதவர்களுக்கு வீடு என்னும் நலதிட்டத்தை இக்காலகட்டத்தில் முன்னெடுத்து செல்லுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

இத்திட்டத்திற்கு தனி நபராகவும், இயக்கமாகவும் உதவிட உங்களை அன்போடு கேட்டு கொள்கிறேன். நன்கொடைகளின் தகவல்களும், பயனாளிகளின் பெயர்களும் தொடர்ந்து மறைமாவட்ட மலரில் வெளியிடப்படும்.

**தற்போது நன்கொடை வழங்கியவர்கள்**

* மறைக்கல்வி - 1,00,000

## மரியாயின் சேனை

# கொமித்சியச் செய்திகள்

- கொமித்சியம் சார்பில் நடத்தப்பட்ட தவக்கால தியானமானது 02-04-2022 அன்று குழித்துறை மார்எப்ரேம் வளாகத்தில் வைத்து நடைப்பெற்றது. இத்தியானத்தை அருட்தந்தை குலசைபெலிக்ஸ் மற்றும் அருட்தந்தை சிபி வழிநடத்தினார்கள்.
- கிராத்தூர், பாலவிளை, பாத்திமாமநகர், மரியகிரி, நடைக்காவு, பனச்சமூடு, ஆற்றூர், செருப்பாலூர், மார்த்தாண்டம் ஆகிய கியூரியாக்கள் சார்பில் ஆக்சேஸ் விழா திட்டமிட்ட பங்குகளில் நடைபெற்றது. சேனையாளர்கள் ஆர்வமுடன் கலந்துக்கொண்டு சேனைவாக்குறுதியை புதுப்பித்துக்கொண்டனர்.
- கொமித்சிய அளவிலான போட்டிகள் ஜூன் மாதம் 12-ம் தேதி பிற்பகல் 3.30 மணியளவில் மார்எப்ரேம் வளாகத்தில் வைத்து நடைபெறும்.

## பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை ஜீன் ஜோஸ்
மேய் 08



அருட்தந்தை ஷாஜி கிறிஸ்டோ
மேய் 09



# ஆயரின் ஏப்ரல் மாத நிகழ்வுகள்



- 1 வெள்ளறடை குரிசுமலையில் திருப்பலி நிறைவேற்றி 'சிலுவை கடவுளின் வல்லமை' என்ற கருத்தை மையப்படுத்தி மறையுரையாற்றினார்.
- 2 ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற மறைமாவட்ட மேய்ப்புபணி அறிவுரை குழுவின் புது பொறுப்பாளர்களின் கூடுகைக்கு தலைமை தாங்கி, பணி நியமன ஆணையும் வழங்கினார்.
- 2 மார்த்தாண்டம் கிறிஸ்தவ ஐக்கியப் பேரவை சார்பில் ஒழுங்குப்படுத்தப்பட்ட தவக்கால கூடுகைக்கு தலைமைத் தாங்கி, தவக்கால தியான உரை வழங்கினார்.
- 3 திரித்துவபுரம் தூய மூவொரிறைவன் ஆலய மக்களுக்கு தவக்கால தியான உரை வழங்கினார்.
- 4 அணக்கரை "Mary Mount" பள்ளிக்கூட ஆண்டு விழாவிற்கு தலைமைத்தாங்கி, மாணவர்கள் வாழ்க்கையில் கொள்ள வேண்டிய இலட்சிய உணர்வைப் பற்றி உரையாற்றினார்.

6 ➢ மார் எப்ரேம் ஆண்டகையின் விண்ணக வாழ்வின் இருபத்தி ஐந்து ஆண்டு நிறைவை முன்னிட்டு வெள்ளெலும்பு ஆலயத்திலிருந்து ஆரம்பித்த பாதயாத்திரைக்கு முன்னுள்ள திருப்பலியில் கலந்துக்கொண்டு, தூபமன்றாட்டு நடத்தி பாதயாத்திரையை துவங்கி வைத்தார்.

7 ➢ மார் எப்ரேம் ஆண்டகையின் விண்ணக வாழ்வின் இருபத்தி ஐந்து ஆண்டு நிறைவை முன்னிட்டு பாதயாத்திரையில் கலந்துக் கொண்டவர்களுக்கு பின்குளம் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி, புதிதாக கட்டியெழுப்பப்பட்ட சமூக நலக் கூடத்தை அர்ச்சித்து அருளினார்.

7 ➢ குழித்துறை மேய்ப்புப்பணி நிலையத்திற்கு வருகைத்தந்த பாதயாத்திரையாளர்களை வரவேற்று, புதிதாக கட்டியெழுப்பப்பட்ட மேய்ப்புப்பணி நிலைய உணவகத்தை திறந்து வைத்தார்.

7 ➢ மார் எப்ரேம் ஆண்டகையின் விண்ணக வாழ்வின் இருபத்தி ஐந்து ஆண்டு நிறைவை முன்னிட்டு குழித்துறை மேய்ப்புப்பணி நிலையத்தில் புதிதாக கட்டியெழுப்பப்பட்ட நினைவுத் தூணை திறந்து வைத்து, மேய்ப்புப்பணி நிலையத்தை மார் எப்ரேம் வளாகம் என்று அறிவித்தார்.

7 ➢ மார் எப்ரேம் ஆண்டகை இறுதி துயில் கொள்ளும் மார்த்தாண்டம் போராலயத்தில் நடைபெற்ற மாலை ஜெபம் மற்றும் தூப மன்றாட்டில் கலந்துக்கொண்டார்.

8 ➢ மார் எப்ரேம் ஆண்டகையின் விண்ணக வாழ்வின் இருபத்தி ஐந்து ஆண்டு நிறைவை முன்னிட்டு மார்த்தாண்டம் போராலயத்தில் திருப்பலி நிறைவேற்றி, நினைவு கூட்டத்தில் கலந்துக் கொண்டு சிறப்பு விருந்தினர்களை வரவேற்று வாழ்த்தினார்.

8 ➢ நாற்பதாம் வெள்ளியை முன்னிட்டு இறச்சகுளம் திருத்தலம் சார்பாக ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்த சிலுவைப்பாதையில் கலந்துக்கொண்டு, தவக்கால தியான உரை வழங்கினார்.

9 ➢ தவக்காலத்தை முன்னிட்டு YMCA சார்பாக வெட்டுவெந்தியில் ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்த Passion Play என்ற நிகழ்வை துவக்கி வைத்தார்.



10 ➢ ஓசானா திருச்சடங்குகள் மற்றும் திருப்பலியை மார்த்தாண்டம் போராலயத்தில் நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

14 ➢ விமலபுரம் ஆலயத்தில் பாதங்கழுவுதல் திருச்சடங்குகள் மற்றும் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

15 ➢ பின்குளம் ஆலயத்தில் புனித வெள்ளி திருச்சடங்குகள் நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

16 ➢ பின்குளம் ஆலயத்தில் உயிர்ப்பு திருச்சடங்குகள் மற்றும் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

18 ➢ மிட்ஸ் அலுவலகம் அருகே புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மினரல் வாட்டர் சுத்திகரிப்பு நிலையத்தை அர்ச்சித்து அருளினார்.

18 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற "மார்த்தாண்டம் மக்கள் வளர்ச்சி நிதி நிறுவனம்" கூடுகைக்கு தலைமைத்தாங்கினார்.

19 ➢ முளகுமூடு ஆலயத்தில் வைத்து நடைபெற்ற அருட்சகோதரி ஜெயா அவர்களின் ஜூபிலி நிறைவு விழா நிகழ்வில் திருப்பலி நிறைவேற்றி, வாழ்த்துக்களை தெரிவித்தார்.

20 ➢ மார்த்தாண்டம் மேரிமக்கள் துறவற சமூகத்தில் நடைபெற்ற அருட்சகோதரிகளின் ஜூபிலி நிறைவு விழா கொண்டாட்டத்தில் திருப்பலி நிறைவேற்றி, தொடர்ந்து நடைபெற்ற வாழ்த்து கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார்.

20 ➢ திருவிதாங்கோடு அரப்பள்ளி ஆலய திருவிழாவை முன்னிட்டு திருப்பலி நிறைவேற்றி, திருத்தூதர் தோமாவின் இறையனுபவம் பற்றி மறையுரையாற்றினார்.

21 ➢ புனரமைக்கப்பட்ட காஞ்சியோடு ஆலயத்தை அர்ச்சித்து திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

22 ➢ பத்தனம்திட்டை மறைமாவட்டம் இராமன்சிற ஆலயத்தில் நினைவு திருப்பலி நிறைவேற்றினார்.

23 ➢ சூசைபுரம் ஆலயத்தில் வைத்து இரு திருத்தொண்டர்களுக்கு குருப்பட்டம் வழங்கினார்.

24 ➢ அருட்தந்தை விபின்ஸ் வில்சன் மற்றும் அருட்தந்தை சுனீஷ் குமார் அவர்களின் முதல் நன்றித் திருப்பலியில் கலந்துக் கொண்டு மறையுரையாற்றினார்.

25 ➢ இலவுவிளை தூய எப்ரேம் இளங்குருமடத்தில் வைத்து களபணியை நிறைவுச் செய்த அருட்சகோதரர்களுக்கு குருத்துவ ஆடையை வழங்கினார்.

25 ➢ தக்கலை மறைமாவட்ட ஆயர் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்களின் நாமவிழா நிகழ்வில் கலந்துக் கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

25 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற அனைத்து பள்ளி கல்லூரிகளின் தாளாளர் மற்றும் தலைமையாசிரியாகளின் கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

25 ➢ மங்காடு ஆலயத்தில் வைத்து நடைபெற்ற அருட்தந்தை ராபின்சன் அவர்களின் குருத்துவ வெள்ளி விழா வாழ்த்துக் கூட்டத்தில் கலந்துக் கொண்டு இறைப்பணி சிறக்க வாழ்த்தினார்.

26 ➢ மார்த்தாண்டம் மேரிமக்கள் துறவற சமூகத்தில் இவ்வாண்டு ஜூபிலி கொண்டாடும் அருட்சகோதரிகளின் தொடக்க நிகழ்வில் கலந்துக் கொண்டு திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

27 ➢ மத்தியாஸ்நகர் ஆலய புதிதாக்கத்திற்கான அடிக்கல் நாட்டினார்.

28 ➢ பனச்சமூடு மேரிமக்கள் துறவற சமூகத்தில் வைத்து நடைபெற்ற அருட்சகோதரி குளோரியா அவர்களின் ஜூபிலி நிறைவு விழா நிகழ்வில் திருப்பலி நிறைவேற்றி, வாழ்த்துக்களை தெரிவித்தார்.

29 ➢ பாண்டிச்சேரி பேராயர் ஜோசப் கலிஸ்றஸ் அவர்களின் பதவி ஏற்பு நிகழ்வில் கலந்துக் கொண்டார்.

30 ➢ இரவிபுத்தன்துறை ஆலயத்தில் மாலை வழிபாட்டு ஆராதனையை தலைமையேற்று நடத்தி இறையாசீர் பொழிந்தார்.



## இம்மாதம் நினைவு கூர

மேய் 2022

1 – உயிர்ப்புக்குப்பின் இரண்டாம் ஞாயிறு
தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித யோசேப்பு
இறைவாக்கினர் எரேமியா
மலங்கரை கத்தோலிக்க பொதுநிலையினர் தினம்


1

2 – மார் அத்தனாசியோஸ்
6 – நேர்மையாளர் யோபு
புனித டொமனிக் சாவியோ


6

7 – நம் ஆண்டவர் இயேசுவின் சிலுவை கண்டெடுத்த நாள்
8 – உயிர்ப்புக்குப்பின் மூன்றாம் ஞாயிறு
திருத்தூதரான மார் யோவான்
9 – இறைவாக்கினர் எசாயா
10 – ஆர்வலராகிய திருத்தூதர் மார் சீமோன்
11 – சுலாவாய் இனத்தவரின் மார் சிறில் மற்றும் மெத்தோடியோஸ்
12 – சைப்ரசின் மார் எப்பிப்பானியோஸ்
நிசிபிஸ் ஆயரும் மல்ப்பானுமாகிய மார் யாக்கோபு
13 – அந்தியோக்கியாளர் மார் ஈசாக் மல்பான்
14 – மார் அதாயி
15 – உயிர்ப்புக்குப்பின் நான்காம் ஞாயிறு
கதிர்களை முன்னிட்டு தூய இறையன்னையின் நினைவு
மார் பக்கோமியோஸ்
20 – நான்கு நற்செய்தியாளர்கள்
21 – புனித ஹெலனாள்
22 – உயிர்ப்புக்குப்பின் ஐந்தாம் ஞாயிறு
புனித றீத்தா


26

25 – புனித சோபியா
26 – சூலோக்கோ (நம் ஆண்டவரின் விண்ணேற்றம்)
புனித பிலிப் நேரி
29 – உயிர்ப்புக்குப்பின் ஆறாம் ஞாயிறு
இறை அழைத்தல் தினம்
புனித தியோடோசியா
30 – ஆர்க் நகரின் புனித யோவான்,
கேசரியா நகரின் புனித எவுசேபியஸ்
தோமஸ் மார் எவுசேபியஸ் ஆண்டகையின் பெயர்விழா


தொழிலாளர்
தினம்
மே
1


நாமவிழா
நல்வாழ்த்துக்கள்
மே
30
தோமஸ் மார் எவுசேபியோஸ்
பாறசாலை மறைமாவட்ட ஆயர்


இறை அழைத்தல் தினம்
மே
29